பிரசார் பாரதி

அகில இந்தய வானொலி, சென்னை-4

**30 08 2026 SUNDAY 12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்கும் வகையில் இளைஞர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்

**2.** இளைஞர்கள் ஞாயிறுதோறும் மிதிவண்டி ஓட்டும் இயக்கத்தில் பங்கேற்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

**3.** நாடு முழுவதும், மருத்துவ முதுகலை படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வு இன்று நடைபெற்றது.

**4.** நேபாளத்தில் சிக்கிய தமிழகத்தை சேர்ந்த **219** பேர் நாளை இரவுக்குள் தமிழகம் திரும்ப உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

**5.** மிசோரமை சேர்ந்த கால்பந்து வீரர் **Lallianzuala Chhangte** சிறந்த கால்பந்து வீரர் விருதை பெற்றுள்ளார்

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்கும் வகையில் இளைஞர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் பேசிய அவர், போதைப் பொருளால் தனிநபர் மட்டுமின்றி ஒட்டுமொத்த குடும்பமும், சமூகமும் பாதிப்படைவதாக கூறினார்.

*(Voice Byte 1 — PM Drug Free - 51 Sec)*

ஆகஸ்ட் மாதத்தில் தேசப்பற்றை உணர்த்தும் வகையில் இல்லம்தோறும் தேசியக்கொடியை ஏற்றும் நிகழச்சி நடைபெற்றதாக பிரதமர் தெரிவித்தார்.

*(Voice Byte 2 - PM Tiranga - 41 Sec)*

பிரதமரின் ஸ்வநிதி திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் 35 லட்சம் பெண்கள் பயனடைந்துள்ளதாக பிரதமர் கூறினார்.

*(Voice Byte 3 - PM Swanithi - 36 Sec)*

பெண்களின் கனவுகளுக்கு சிறகுகள் முளைத்து தரையில் இருந்து வானம் வரை எட்டியுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

*(Voice Byte 4 - PM Mission Shakti - 34 Sec)*

புதிய மகசூல், அறிவியல் ஆலோசனை மற்றும் நேரடி சந்தைப்படுத்துதல் காரணமாக சிறிய பண்ணைகளில் வருவாயும் மேம்பட்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

*(Voice Byte 5 - PM TN Kodai - 36 Sec)*

பண்டிகைகளின்போது உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் என்ற வேண்டுகோளை விடுப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

*(Voice Byte 6 - PM Festival Local Products - 33 Sec)*

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>>

பெண்களின் முன்னேற்றம் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் பேசியதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், **Shakthi Sat** இயக்கம் மூலம் **108** நாடுகளை சேர்ந்த **12** ஆயிரம் மாணவிகள் செயற்கைக்கோள் தொழில்நுட்பம் குறித்து கற்றுக் கொண்டதாக பிரதமர் கூறியதை சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, உஸ்பெகிஸ்தான் அதிபர் **Shavkat Mirziyoyev**-வுடன் தாஷ்கண்டில் ஆலோசனை நடத்தினார்.

வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, டிஜிட்டல் தொழில்நுட்பம், எரிசக்தி, கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, உஸ்பெகிஸ்தான் யோகா அமைப்பு சார்பில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் பிரதமர் கலந்துகொண்டார்.

<<<<<<>>>>>>

இளைஞர்கள் ஞாயிறுதோறும் மிதிவண்டி ஓட்டும் இயக்கத்தில் பங்கேற்க வேண்டும் என்று மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மிதிவண்டி ஓட்டும் இயக்கத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், போக்குவரத்து நெரிசலை குறைக்கவும் மிதிவண்டி பெரிதும் பயனுள்ளதாக அமையும் என்று தெரிவித்தார்.

இளைஞர்கள் நாள்தோறும் ஒருமணிநேரம் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி செய்து ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய இந்திய கிரிக்கெட் அணி பயிற்சியாளர் திரு கௌதம் கம்பீர், உடற்பயிற்சி மூலம் சுயசார்பு இந்தியாவை உருவாக்க முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

அனைத்து இளைஞர்களும் ஆரோக்கியமான இந்தியா இயக்கத்தில் பங்கேற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும், மருத்துவ முதுகலை படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வு இன்று நடைபெற்றது.

இந்த நீட் தேர்வை எழுத 2 லட்சத்து 73 ஆயிரம் எம் பி பி எஸ் பட்டதாரிகள் பதிவு செய்திருந்தனர்.

காலை 9 மணிக்கு தொடங்கிய நீட் தேர்வு மதியம் பணிரெண்டரை மணிவரை நடைபெற்றது.

சென்னை, காஞ்சிபுரம், மதுரா, தில்லி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தேர்வு நடைபெற்றது.

<<<<<<>>>>>>

நேபாள வெள்ளத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 734-ஆக அதிகரித்துள்ளது.

காணாமல் போன 2 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்டோரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதுவரை 4 ஆயிரத்து 400 பேர் மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

Chitawan, Nawal Parasi உள்ளிட்ட எட்டு மாவட்டங்களிலிருந்து 675 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக நேபாள காவல்துறை தெரிவித்துள்ளது.

இதனிடையே, Bhote Koshi ஆற்றில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளதாக நேபாள அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கோசி ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதாக நேபாள தேசிய பேரிடர் மேலாண்மை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

இந்தியாவிலிருந்து நேபாளத்திற்கு 11 டன் நிவாரணப் பொருட்கள் விமானம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அத்தியவசியப் பொருட்கள், தொழில்நுட்ப மற்றும் நிவாரணப் பொருட்கள் விமானம் மூலம் காட்மாண்டு அனுப்பிவைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

முன்னதாக, இந்திய விமானப்படையின் மூன்று விமானங்களில் இதுவரை 57 டன் நிவாரணப் பொருட்களை இந்தியா, நேபாளத்திற்கு அனுப்பியுள்ளது.

<<<<<<>>>>>>

நேபாளத்தில் சிக்கிய தமிழகத்தை சேர்ந்த 319 பேரில் 219 பேர் நாளை இரவுக்குள் தமிழகம் திரும்ப உள்ளதாக மாநில அமைச்சர் திரு ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நேபாளத்தில் சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்க முதலமைச்சரின் உத்தரவுக்கு ஏற்ப தில்லியில் முகாமிட்டு, பணிகளை ஒருங்கிணைத்ததாக கூறினார்.

**தமிழகத்திலிருந்து 319 பேர் பல்வேறு குழுக்கள் மூலமாக நேபாளம் சென்றிருந்ததாக அவர் தெரிவித்தார்.**

**அதில் 219 பேர் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்று அவர் கூறினார்.**

<<<<<<>>>>>>

**மிசோரமை சேர்ந்த கால்பந்து வீரர் Lallianzuala Chhangte சிறந்த கால்பந்து வீரர் விருதை பெற்றுள்ளார்.**

**முன்னாள் இந்திய கால்பந்து அணித்தலைவர் Bhaichung Bhutia அவருக்கு விருதை வழங்கினார்.**

**கால்பந்து விளையாட்டு வீரர்கள் சங்கம் சார்பாக வழங்கப்படும் இந்த விருதுக்கு நாட்டில் உள்ள கால்பந்து வீரர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.**

<<<<<<>>>>>>

**ஆசியக் கோப்பை மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று தாய்லாந்து அணியை எதிர்கொள்கிறது.**

**துபாயில் இப்போட்டி இன்றிரவு 8 மணிக்குத் தொடங்குகிறது.**

**<<<<<<END>>>>>>**